DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 92/2024 LW- 11 PW- 8

| | | |
|---|---|---|
| Name | : | தங்கமுனியசாமி (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : | ஜெகநாதன் |
| Village | : | காவல் ஆய்வாளர் |
| Taluk | : | ஒத்தக்கடை |
| District | : | மதுரை மாவட்டம் |
| Age | : | 42 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது மதுரை மாவட்டம், ஒத்தக்கடை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.11.2023ம் தேதி நத்தம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.விஜயபாண்டியன் என்பவர் வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை முடித்து வைத்திருந்த நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.603/2023 பிரிவுகள் 279, 337 இ.த.ச. வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை நான் விசாரித்ததில் அவர்கள் சார்பு ஆய்வாளரிடம் சொன்னதுபோல் என்னிடமும் சொன்னதால் நான் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட செல்லம்மாள் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளை 279, 337 இ.த.ச. என்பதிலிருந்து 279, 304-A இ.த.ச.வாக

மாறுதல் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.11ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் 17.06.2024ம் தேதி இவ்வழக்கின் எதிரியான அழகர் என்பவர் நிலையம் ஆஜரானபோது காரணம் கூறி கைது செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்தேன். பின்னர் 18.06.2024ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 57 BV 4575 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகன அறிக்கை பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன செல்லம்மாள் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திரு.முகமதுநசீம் என்பவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.12ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 18.06.2024 அன்று எதிரி அழகர் மீது 279, 304–A இ.த.ச. பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. 09.07.2022 முதல் 02.01.2025 வரை நத்தம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் பணிபுரிந்த காலகட்டத்தில் பிரதான சாலைகள் எனக்கு நன்கு பரிட்சயம் என்றால் சரிதான். இவ் வழக்கில் காயமுற்ற நபரை நத்தம் அரசு மருத்துவமனையில் தீனதயாளன் என்பவர் சேர்த்துள்ளதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி தீனதயாளனை சாட்சியாக விசாரிக்க அதற்கு காரணம் என்ன என்றால் அவர் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் விசாரிக்கவில்லை. இந்த விபரங்களை குற்ற இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அதனால் நான் சொல்வது

போல் தீனதயாளன் என்பவர் வழிப்போக்கர் என்றும், விசாரிக்காததற்கு சொல்லும் காரணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தீனதயாளன் மருத்துவமனையில் காயம்பட்ட நபரை சேர்க்கும் போது மணி 6.45 என்றால் சரிதான்.

4) பொதுவாக நத்தம் அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு விபத்து தொடர்பாக தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். பொதுவாக மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தால் அதை இன்டிமேஷன் ரிஜிஸ்டரில் பதிவு செய்வோம். நான் மேற்படி ரிஜிஸ்டரை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். 6:45 மணிக்கு தகவல் கிடைத்துவிட்ட நிலையில் 9.00 மணிக்கு தான் விபத்து குறித்த தகவல் கிடைக்கப்பெற்று நடவடிக்கை மேற்கொண்டதாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலம் 3Cயில் பொது நாட் குறிப்பு பதிவு விவரம் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் காலம் 14ல் தகவல் கொடுத்தவரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி பதிவுகள் எதனால் இல்லை என்பதற்கான விளக்கம் சார்பு ஆய்வாளர் விஜயபாண்டியன் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) சம்பவ வரைபடம் மற்றும் பார்வை மகசரை சரிபார்த்தேன் என்றால் சரிதான். சம்பவ இடமானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அதன் எண் NH383 என்றால் ஞாபகம் இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்பதும் அதன் எண் குறித்தும் மாதிரி வரைபடத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் பார்வை மகசரில் அதன் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடந்துள்ளதால் குற்ற இறுதி அறிக்கையில் அது குறித்த விபரமும் சாலையின் எண் குறித்த விவரமும் குறிப்பிடப்பட வேண்டும் என்றாலும், அது இந்த வழக்கில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றாலும் சரிதான். சாலை ஈரமாக இருந்ததா அல்லது காய்ந்த நிலையில் இருந்ததா என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ரோட்டின் அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை என்பதால் இரு

பக்கங்களிலும் வெள்ளை கோடுகள் இருக்கும் என்றாலும் இடதுபுறம் வலது புறம் பிரித்து வெள்ளை கோடு நடுவில் போட்டு காட்டப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு மாதிரி வரைபடத்தில் இல்லை என்றால் சம்பவம் நடைபெற்ற இடத்தில் அவ்வாறான கோடுகள் இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்பதால் கோடுகள் போடப்பட்டிருக்கும் என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரி அல்ல.

6) மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டது போன்று சாலை நேராக இல்லை என்றாலும் சற்று வளைவாக உள்ளது என்றாலும் சரியல்ல, அம்மன் குளத்திற்கு முன்புதான் வளைவு உள்ளது, அம்மன் குளத்திற்கு பிறகு நேராக தான் உள்ளது. சம்பவ இடம் சென்று பார்வையிடாததால் தான் தவறான விபரங்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏழு நாட்கள் காலதாமதமாக வாகனத்தை வாகன ஆய்வுக்கு உட்படுத்தி உள்ளேன் என்றால் சரிதான், ஆவணங்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. மேற்படி ஏழு நாட்கள் வாகனம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தது. இந்த விபரம் எனது அறிக்கையில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7) விபத்து எவ்வாறு நடந்தது என்பதற்கு வாகனம் ஓட்டி வந்த எதிரியை விசாரித்தாரா, இல்லையா என்பது குறித்த விபரங்கள் எனது விசாரணையில் இல்லை என்றால் சரிதான். எதிரியை நான் கைது செய்து அவரை விசாரித்ததாக வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அதனால் எதிரியை நான் விசாரிக்கவில்லை என்றாலும் விசாரித்து இருந்தால் பொது நாட்குறிப்பிலும், குற்ற இறுதி அறிக்கையிலும் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், அதனால் நான் விசாரித்ததாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போன நபரின் ஆடைகள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மூன்று நாட்கள் கழித்துதான் மேற்படி நபர் இறந்துள்ளார்.

8) மோட்டார் வாகன ஆய்விற்கு உடனடியாக உட்படுத்தப்பட்டிருந்தால் மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மேலும் கூடுதல்

விவரங்கள் தந்திருக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சாலை விளக்குகள் இருந்ததாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது அதிக போக்குவரத்துகள் உள்ள சாலை என்றால் சரிதான். சம்பவ சமயம் மழை சாரலாக இருந்ததால் வாகனம் வேகமாக செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. எதிரெதிரே வாகனங்கள் சென்று கொண்டிருப்பதால் வாகன விளக்குகள் எரியும் நிலையில் வாகனங்கள் வேகமாக செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனுவிலும், எனது விசாரணையிலும் சாட்சிகள் எதிரி ஓட்டி வந்த வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்ததாக தெரிவித்துவிட்டு, நீதிமன்ற விசாரணையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்ததாக முரண்பட்டு தெரிவித்துள்ளார்கள் என்றாலும் அதனால்

9) சம்பவம் நான் சொன்ன விதத்தில் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. அதேபோல் இவ்வழக்கில் இறந்து போன நபர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றதாக புகார் மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு முரண்பட்டு சாட்சிகள் நீதிமன்ற விசாரணையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நடந்து சென்றதாக முரண்பட்டு தெரிவித்துள்ளார்கள் என்றால் நீதிமன்ற விசாரணையில் சொன்ன விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. அதனால் சம்பவ இடமாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் தவறானது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சாலையை கடப்பதற்கு எச்சரிக்கை பலகைகள் கிடையாது என்றால் சரிதான். அதனால் சம்பவ இடத்தில் இறந்த நபர் சாலையை கடக்ககூடாது என்றாலும், அவர் தவறான வகையில் திடீரென சாலையை குறுக்கே கடந்ததால் ஏற்பட்ட விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல.

10) இறந்து போன நபருக்கு இழப்பீடு தொகை பெற வேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்

விபத்து ஏற்படவில்லை என்றாலும், விபத்திற்கு எதிரி பொறுப்பு கிடையாது என்றாலும், விபத்தானது சாலை கடந்த நபரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அதனால் எதிரியை குற்றம் சாட்டப்பட்டவராக காட்ட இயலாது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு எதிரிக்கு எதிராக நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.04 15:25:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்